


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பாக, உலக நுகர்வோர் உரிமை தினவிழா நிகழ்ச்சி நாகர்கோவில், பெண்கள் கிறிஸ்தவ கல்லூரியில் இன்று (29.06.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 406/2016 நாள்: 29.06.2016

**உலக நுகர்வோர் உரிமை தின விழா**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.06.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கன்னியாகுமரி ஜில்லா நுகர்வோர் பாதுகாப்பு மையம், பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி குடிமக்கள் நுகர்வோர் மன்றம் இணைந்து நடத்திய உலக நுகர்வோர் உரிமை தினவிழா நிகழ்ச்சி, இன்று (29.06.2016) நாகர்கோவில், பெண்கள் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தலைமையேற்றி, பேசும்போது தெரிவித்ததாவது:-

நுகர்வோர்களாகிய நாம், எந்த ஒரு பொருள்களை வாங்கினாலும் அதற்கான ரெசீதை விற்பனையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். பெறப்பட்ட பொருட்களுக்கு ரெசீது இருந்தால் மட்டும்தான், விற்பனையாளர்கள் அதற்கான வரி செலுத்துவார்கள். மேலும் அந்த பொருட்களில் ஏதேனும் தரக்குறைவு கண்டறியப்பட்டு, அதனை திரும்ப விற்பனையாளர்களிடம் வழங்கும்பட்சத்தில், அந்த பொருட்கள் மீதான ரெசீது கட்டாயமாக தேவைப்படும். எனவே எந்தவொரு பொருட்கள் வாங்கும்போது தவறாமல் ரெசீதை பெற்று கொள்ள வேண்டும். மேலும் விலைமதிப்புடைய ஏதேனும் பொருட்களை வாங்கும்பட்சத்தில், முத்திரை, தரம் மற்றும் உத்தரவாதம் ஆகியவற்றை அறிந்து, அந்த பொருட்களை வாங்க வேண்டும் என தெரிவித்தார்.

உலக நுகர்வோர் தினவிழாவை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டிகளில் வெற்றிபெற்ற 8 கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களும், நினைவு பரிசுகளும் வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திருமதி. டி.சின்னம்மாள், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. எஸ்.வடிவேல் முருகன், மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் மரு. ஆர். கருணாகரன், அஞ்சலகங்கள் முதுநிலை கண்காணிப்பாளர் திரு. பி. பாண்டியராஜன், கன்னியாகுமரி ஜில்லா நுகர்வோர் பாதுகாப்பு மையம் தலைவர் திரு. எம். தாமஸ், தமிழ்நாடு அரசின் போக்குவரத்து கழகத்தின் துணை மேலாளர் திரு. கோபாலகிருஷ்ணன், பெண்கள் கிறிஸ்தவ கல்லூரி முதல்வர் முனைவர் நிர்மலா நல்லதம்பி, துணை பொது மேலாளர் (பிஎஸ்என்எல்) திரு. கே.சந்திரன், கன்னியாகுமரி ஜில்லா நுகர்வோர் பாதுகாப்பு மையம் பொது செயலாளர் திரு. டி. சிதம்பரம்பிள்ளை, மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு. எஸ்.சொக்கலிங்கம்பிள்ளை, மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு. சொக்கலிங்கம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.